# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## O.S. 155/2019

## CNR.No.TNCB19000

| | | | |
|---|---|---|---|
| 18.06.2024 | கலையரசன் | த/பெ.ரங்கசாமி | .வா.சா.1 |

வா.சா.1. கலையரசன் மீண்டும் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

15.04.1999 ம் தேதி எங்கள் குடும்பத்தில் ஏற்படுத்திக் கொண்ட பாகசாசன பத்திரத்தில் ஏ செட்யூல் சொத்தானது 1ம்வாதியான எனது தந்தையாருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சொத்தை தான் 22.05.2001 ம் தேதி எனது தாயாருக்கு கிரைய பத்திரமாக எழுதப்பட்டது என்றால் சரிதான். எனது அம்மா எனது அப்பாவிற்கு முன்பே இறந்து விட்டார் என்றால் சரிதான். எனது அம்மா இறக்கும் போது யார் யார் வாரிசுகள் என்றால் எனது தந்தை ரங்கசாமி, சகோதரி பிரபாவதி, காந்திமதி மற்றும் நான் ஆகியோர்கள் ஆவோம்.

எனது அம்மா அவரது சொத்தை பொறுத்து எந்தவிதமான ஏற்பாடும் செய்யாமல் இருந்திருந்தால் ஆளுக்கொரு நான்கு பங்கு வந்திருக்கும் என்றால் எனது அம்மா எதுவுமே செய்யவில்லை. எனது அம்மா அவருடைய சொத்தை பொறுத்து எந்தவிதமான உயிலும் எழுதி வைக்கவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இன்று வரை எனது அம்மா உயில் ஏதேனும் எழுதி வைத்திருக்கிறாரா என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்புதான் தெரியும்.

இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள உயிலை யார் எழுதினார்கள் என்றால் எனது அம்மா சுந்தராம்பாள். அந்த உயில் 12.09.2019 ம் தேதி எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அம்மா 2019 ம் வருடம் எழுதின உயிலை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அந்த உயிலில் அவருடைய காலத்திற்கு பிறகு எப்படி பிரியும் என்று எழுதியிருக்கிறது என்றால் சரிபாகமாக என் அப்பா உட்பட சகோதரிகள் மற்றும் எனக்கு சரிபாகமாக பிரிக்க வேண்டும் என்று 2019 ம் வருட உயிலில் எழுதப்பட்டுள்ளது.

எனது அம்மா 2019 ம் ஆண்டில் உயில் எழுதாமல் இருந்திருந்தால் என்ன நிலை இருக்குமோ அதே நிலைதான் இருந்திருக்கும் என்றால் சரிதான். அந்த உயிலை

பொருத்தவரை யார் யாருக்கு எந்த எந்த பகுதி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக உயில் எழுதப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனது அம்மாவிற்கு நோய்வாய் பட்டதால் எழுதியதாக சொல்லப்பட்டுள்ளது. எனது அம்மாவின் காலத்திற்கு பிறகு எந்த பிரச்சினையும் வரக்கூடாது என்பதற்காக உயிலை எழுதுவதாக சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் தனிப்பட்ட முறையில் யாருக்குமே எந்த சொத்தும் குறிப்பிட்டு பிரித்து கொடுக்காமல் பொதுவாக சொல்லப்பட்டுள்ளதால் எனது தாயார் அதுபோல் உயில் எழுதுவதற்கான வாய்பில்லை என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி
என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம்

மேட்டுப்பாளையம்.